REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 1உ புதன் (17—8—55) ★ ★ வெளியூர்: ஆவணி 2உ வியாழன் (18—8—55) [இதழ் 55

நம்பி நம்பித்தானே இந்த 'நாசம்' ஏற்பட்டது?

சென்னை சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டு நகல் திட்டத்தில் அடங்கியிருந்த திட்டங்களுள் ஒன்றைக்கூட திட்டக் குழு ரத்து செய்துவிடவில்லையாம்; ஆனால், திட்டத்தின் 'பரிமாணம்' பண வசதிக்குத் தகுந்தபடி குறைக்கப்பட்டிருக்கிறதாம்.

மாநில சர்க்கார்களின் பல்வேறு திட்டங்களுக்கும், மத்திய சர்க்கார் பொறுப்பேற்கும் திட்டங்களுக்கும் எவ்வளவு பணத்தை திட்டக் குழு ஒதுக்க இருக்கிறது என்பன போன்ற விவரங்களைத் தெரிந்துகொள்ள சர்க்கார் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்களாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

மிரட்டல் மூலம் சர்க்காரைப் பணியவைக்க முடியாதாம்!

கோவா மீது படையெடுப்பாம்!

பலாத்காரத்தைத் தடுக்க பலாத்காரம் உபயோகித்தனராம்!

போர்ச்சுகலின் வியாக்கியானம்

லிஸ்பன், ஆக. 15—

"குழப்பம் செய்வதற்காக, ஆக்கிரமிப்பு நோக்குடன், ஆயிரக்கணக்கான இந்தியப் படையெடுப்பாளர்கள், இந்தியாவில் உள்ள போர்ச்சுகீசிய எல்லைக்குள் நுழைவதைத் தவிர்க்க வேண்டும்—என்று சில நாட்களுக்கு முன்னர் போர்ச்சுகல் சர்க்கார் வெளியிட்ட வேண்டுகோளையும், எச்சரிக்கையையும், துரதிருஷ்டவசமாக இந்திய சர்க்கார் கவனிக்காமலிருந்துவிட்டனர்;

"முழு விவரங்களும் இன்னும் கிடைக்கவில்லை; ஆனால் பல ஆயிரக்கணக்கான இந்தியர் எங்கள் எல்லைக்குள் நுழைந்திருக்கின்றனர் என்று அறியவருகிறது;

"பல்வேறு முனைகள் வழியாக அவர்கள் நுழைந்தனர்; அதிகாரிகள் தடுத்தும் கேட்கவில்லை; பின்னர், தங்களுக்குத் தரப்பட்டிருந்த கடுமையான உத்தரவுகளின்படி, அதிகாரிகள், பலாத்காரம் உபயோகிக்காமல் இந்தியர்கள் நுழையவிடாமல் தடுப்பதற்கான எல்லா முறைகளையும் கையாண்டனர்;

"என்றாலும், சில இடங்களில் எல்லையைக் கடந்து உள் நுழைய முயற்சித்த படையெடுப்பாளர்களின் போக்கு, துப்பாக்கி உபயோகிப்பதைத் தவிர்க்க முடியாததாக்கிவிட்டது; முதலில் ஆகாயத்தை நோக்கியும், பின்னர் பூமியை நோக்கியும் சுடப்பட்டது. அதற்குப் பின்னர்தான், படையெடுப்பாளர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது;

"எனவே, பலாத்காரத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, போர்ச்சுகீசிய அதிகாரிகள் பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது; இதன் விளைவாக, பரிதாபத்துக்குரிய வகையில் சிலர் கொல்லப்பட்டிருக்கின்றனர்; சிலர் காயமடைந்திருக்கின்றனர்;

"இந்த இரத்தக்களரி ஏற்பட்டதற்கான பொறுப்பு முழுவதும், போர்ச்சுகல் சகித்துக்கொண்ட இந்தப் படையெடுப்பை யார் தூண்டினர்களோ—ஒப்புதல் தந்தார்களோ — ஆதரித்தார்களோ — அவர்களைத்தான் சேரும்;

"இவை பற்றிய முழு விவரங்கள் இன்னும் எதிர்பார்க்கப்படுகின்றன; கிடைத்தபாடில்லை; கிடைத்ததும் அவை வெளியிடப்படும்;

"போர்ச்சுகீசிய எல்லைக்குள் வாழும் மக்களிடை முழு அமைதி நிலை பெற்றிருக்கிறது; அந்த மக்கள், படையெடுப்பாளர்களின் போக்கு குறித்து, இகழ்ச்சியாகப் பேசிக்கொள்கின்றனர்;

"போர்ச்சுகீசிய ஆதிபத்திய உரிமையை மீறி நடைபெற்ற பலாத்காரப் படையெடுப்புச் செயல்களை ஆட்சேபிப்பதற்காக, இந்திய சர்க்காருக்கு ஆட்சேபணைக் குறிப்பு ஒன்றை போர்ச்சுகல் அனுப்பி வைக்கிறது,"

—என்று, இன்று கோவாவில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து, போர்ச்சுகல் சர்க்கார் வெளியிட்டுள்ள குறிப்பு கூறுகிறது.

கோவா படுகொலை: சென்னையில் கண்டனம்

தி.மு கழகம் உட்பட பல கட்சிகள் கலந்துகொள்ளும்

கோவா படுகொலையைக் கண்டிக்கவும், உயிர் நீத்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கவுமாக சென்னையில் நாளை (18—8—55) நகர் முழுதும் 'ஹர்த்தால்' நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை தொழிலாளர் சங்கம், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசியத் தொழிலாளர் சங்கம், அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரஸ், சோஷலிஸ்டு கட்சி முதலிய அமைப்புகள் 'ஹர்த்தாலி'ல் கலந்து கொள்ளும்.

தி.மு. கழகச் சார்பில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் கலந்து கொள்வார்.

மாணவர்கள், தொழிலாளர்கள், பொதுமக்கள் ஆகியோரடங்கிய மாபெரும் கண்டன ஊர்வலம் ஒன்றும் பெரம்பூர், கான்ரான்ஸ்மித் நகர் மைதானத்திலிருந்து மாலை 3 மணிக்குப் புறப்படும்.

மாணவர்களும், தொழிலாளர்களும், பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் கலந்துகொள்ளுமாறு, 'ஹர்த்தால்' குழுவினர் கேட்டிருக்கின்றனர்.

கட்டுப்பாட்டை நிலைநாட்ட தக்க நடவடிக்கை எடுப்பார்களாம்

குமஸ்தாக்களின் 'நேரடி நடவடிக்கை' பற்றி சர்க்கார் அறிவிப்பு

புதுடில்லி, ஆக. 16—

"குறைகள் பற்றி சர்க்கார் எப்போதும் கவனிக்கத் தயாராயிருக்கின்றனர்; அப்படியிருக்கும்போது, அந்தக் குறைகளை நிவர்த்திக்குமாறு கூறி பயமுறுத்துவதினாலேயோ, நேரடி நடவடிக்கை என்று மிரட்டுவதினாலேயோ சர்க்காரைப் பணியவைக்க முடியாது;

"சர்க்கார் ஊழியரிடையே ஒழுக்கத்தையும், சரியான நடத்தையையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறது; இதற்காகத் தேவைப்படும்போது சர்க்கார் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்,"

—என்று, டில்லி மத்திய சர்க்கார் அலுவலக மூன்றும் பிரிவு குமாஸ்தாக்களின் நேரடி நடவடிக்கைபற்றி மக்கள் சபையில் கேட்கப்பட்டபோது உதவி உள்நாட்டு மந்திரி பி. என். தத்தார் தெரிவித்திருக்கிறார்.

உள்நாட்டு மந்திரி பண்டித பந்த், சில தினங்களுக்குமுன் விடுத்த எச்சரிக்கை இன்றுவரை எந்த பலனையும் தரவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

"என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள சர்க்கார் உத்தேசித்திருக்கிறது?" என்று கேட்டபோது, "தாடி வளர்ப்பது, அரைகுறை ஆடையுடன் அலுவலகம் வருவது போன்ற விரும்பத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர்மீது என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி சர்க்கார் இனிமேல்தான் யோசிக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"சர்க்காருடன், குமாஸ்தாக்கள் சங்கம் பேச்சுவார்த்தைகள் நடத்த மேற்கொள்ளப்பட்ட இருமுயற்சிகளுக்கு சர்க்கார் செவி சாய்க்கவில்லை என்பது உண்மையா?" என்றபோது, 'இல்லை' என்று மறுத்திருக்கிறார்.

மூன்றும் பிரிவுக் குமாஸ்தாக்கள் கோரும் சம்பள விகிதப்படி தருவதானால் 10 கோடி ரூபாய் தேவையாகும் என்றும் அது பற்றி யோசிக்க இப்போது இயலாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒத்திவைத்துவிட்டனராம்

புதுடில்லி, ஆக. 16—

மத்திய சர்க்கார் அலுவலகங்களில் பணியாற்றும் மூன்றாவது பிரிவு குமாஸ்தாக்கள், தங்கள் ஊதிய உயர்வுக்காக நடத்திவரும் 'நேரடி நடவடிக்கை'யை தற்போது ஒத்திவைத்துவிடத் தீர்மானித்துள்ளனராம்!

கோவா படுகொலை எதிரொலி

வீரர்களுக்கு வணக்கம் செலுத்த இந்திய மக்கள் சபை ஒத்திவைப்பு

நாடெங்கும் கண்டனம்

கோவா விடுதலைப் போரில் நேற்று உயிர்த் தியாகம் புரிந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளதாம்.

கோவா விடுதலைக்கான சகல கட்சிகளின் குழு, இனி தொடர்ந்து போராட்டம் நடத்துவதை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாக அறிவித்திருக்கிறது; என்றாலும், அடுத்து இயக்கம் எப்படி நடத்துவது என்பது குறித்து சிக்கிரமே முடிவெடுக்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறது.

இந்திய மக்கள் சபையிலும், 'ராஜ்யங்கள் சபை'யிலும் கோவா விடுதலைப் போரில் உயிர் நீத்தவர்களுக்கு அனுதாபமும், பாராட்டும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

போர்ச்சுகீசியரின் மிருக வெறிக்குப் பலியானவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் நோக்குடன் இரு சபைகளும் அரை மணி நேரம் ஒத்திவைக்கப்பட்டன.

மக்கள் சபையில் பிரதமர் நேருவும், ராஜ்ய சபையில் பண்டித பந்தும், போர்ச்சுகீசியரின் அடக்குமுறைப் போக்கைக் கண்டித்துப் பேசியிருக்கின்றனர்.

பண்டித பந்த் பேசுகையில், 'போர்ச்சுகீசியரின் கோபமூட்டுகிற நடவடிக்கைகளால் இந்திய சர்க்கார் நிதானம் இழந்துவிடாது,' என்று தெரிவித்திருக்கின்றார்.

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★

சென்னை தி. மு. கழகத் தோழர்களுக்கு!

அவசர வேண்டுகோள்

கோவா படுகொலையைக் கண்டிப்பதற்கென 18-8-55 மாலை 3 மணி அளவில், பெரம்பூர், திரு. வி. க. திடலிலிருந்து (கான்ரான்ஸ்மித் நகர் மைதானம்) புறப்படும் ஊர்வலத்தில், தி.மு.கழகக் கொடிகளுடன் கலந்து கொள்ளுமாறு சென்னை மாவட்ட குழு உள்ளிட்ட எல்லா கிளைக் கழக நிர்வாகிகளையும், தோழர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

—என். வி. நடராசன்,
துணைப் பொதுச்செயலாளர்,
தி. மு. கழகம்
சென்னை: 17—8—55

★★★★★★★★★★★★★★★★★

மதவாதிகள் செயலா?

பியூனஸ் அயர்ஸ், ஆக. 16—

அர்ஜென்டைனா குடியரசுத் தலைவர் பெரானை கொல்வதற்காக செய்யப்பட்ட சதி கண்டுபிடிக்கப்பட்டு விட்டதாக மாலைச் செய்தித்தாள்கள் அறிவித்திருக்கின்றன; ஆனால் சதி பற்றிய மேலும் தகவல்கள் உடனடியாக அறியக்கூடவில்லையாம்.

எம். எல். ஏ. சுட்டுக்கொலை

பீஜப்பூர், ஆக. 15—

கூட்டமொன்றுக்கு போய்விட்டுத் திரும்புகையில், பம்பாய் சட்ட சபை உறுப்பினரான எம். ஆர். படீல் என்பவரை, இனந்தெரியாத ஒருவர் சுட்டுக் கொன்று விட்டதாகத் தெரிகிறது.

சிங்கப்பூருக்கு பூரண சுதந்திரம்

சிங்கப்பூர் பூரண சுதந்திரம் பெறுவதற்கான கால எல்லை குறித்து, சிங்கப்பூர் முதன் மந்திரி டேவிட் மார்ஷல், லெனாக்ஸ் பாயிட் என்ற பிரிட்டிஷ் காலனி மந்திரியிடம் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது தெரிவித்திருக்கிறாராம்.

1959-ல் ஸ்தல சுயாட்சி வேண்டுமென, மார்ஷல் கோரியிருப்பதாகவும் தெரிகிறது.

பிரிட்டிஷ் மந்திரியும்—சிங்கப்பூர் முதன் மந்திரியும் நடத்திவரும் பேச்சு வார்த்தைகள், அமைதியான நட்புறவுச் சூழ்நிலையில் நடைபெறுவதாக பார்வையாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 18—8—'55 புதன்

அடக்குமுறை வீழ்க!

கோவாவில் தொடர்ந்து ஆதிக்கம்புரிய மனப்பால் குடிக்கும் போர்ச்சுகீசிய ஆதிபத்தியவாதிகள், கோவாவை விடுவிக்கக் கோரி அமைதியான முறையில், நிராயுதபாணிகளாகப் போராட்டம் நடத்த கோவா எல்லைக்குள் நுழையும் தொண்டர்கள்மீது. ஏவி வரும் அடக்குமுறைக்கு அளவே இல்லாது வளர்ந்து வருகிறது.

கடந்த 15-ந் தேதியன்று எல்லைக்குள் புகுந்த தொண்டர்களில் எண்ணற்றோரை, தமது துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கிக்கொண்டிருக்கின்றனர் — போர்ச்சுகீசிய ஆதிபத்தியக்காரர்கள்.

ஐரோப்பாவில் அடக்குமுறை தர்பார் நடத்துவதில் சார் ஆட்சியும், பிறரைக் கொடுமைப்படுத்துவதில் போர்ச்சுகல், ஸ்பெயின் ஏகாதிபத்தியங்களும் 'பெயர் பெற்றவை' என்று, பொதுவான கருத்து ஒன்று கூறப்படுவதுண்டு.

'அடக்குமுறைகளாலேயே, தன் மணி முடியின் ஒளி குன்றாது பார்த்துக்கொள்ள முடியும்' என்ற சார் மன்னனின் எண்ணத்தில் மண் தூவப்பட்டாகிவிட்டது; ஸ்பெயினும், உலகத்தில் நல்ல பெயர் எடுக்க முயற்சிக்க முற்பட்டுவிட்டது; ஆனாலும், போர்ச்சுகல் மட்டும் இன்னமும் — உலகம், இன்று இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதித் துவக்கத்தில் உருண்டுகொண்டிருக்கிறது— என்பதை மறந்துவிட்டு, பழைய 'காட்டு ராஜா' தர்பார் நடத்திவருகிறது.

'உரிமை முழக்கத்தினை உலகம் முழுவதுமே திரண்டெழுந்து நின்றாலும், தடுத்துவிடுவது முடியாது,' என்ற உண்மையை, இந்த நூற்றாண்டின் — இன்னமும் எழுதப்படாத வரலாற்றில் இடம்பெறவிருக்கும் சம்பவங்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றன. இந்த உண்மையைப் புரிந்துகொள்ளும் நாகரீக உள்ளம், இன்னமும், போர்ச்சுகீசியருக்கு ஏற்படாமல் போயிருப்பது என்ன காரணத்தாலோ தெரியவில்லை?

அமைதியான முறையில், நிராயுதபாணிகளாக, 'கோவாவை விடுவிக்க வேண்டும்,' என்று கோருவோரை, துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாக்குவது எந்த வகையில் நியாயமானது என்பதை உலகத்தோர் சிந்திக்கத்தான் செய்வர்.

கடந்த 15-ந் தேதியன்று, போர்ச்சுகீசிய இராணுவத்தினர், மனித வேட்டையில் ஈடுபட்டு, எல்லைப் பகுதிகளை இரணகளமாக்கியிருப்பது, போர்ச்சுகீசியரின் வீரத்தையோ, வீராப்பையோ எடுத்துக் காட்டாது! மாறாக, ஏகாதிபத்தியப் போக்கின் குணம்சங்களுக்கு இலக்கணம் வடிப்பதாகவே அமையும்.

'தங்கள் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கும் கோவா பகுதியின் எல்லைக்குள், இதரர்கள் அத்துமீறி நுழைவது சட்ட விரோதமானது,' என்று போர்ச்சுகீசியர் கருதினால், அப்படி நுழைபவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாமே தவிர, அவர்களிடம், பேசுவதற்கு துப்பாக்கிக் குண்டுகளை சொற்களாக உபயோகித்துக் கொள்வது மனித உள்ளம் கொண்டோரின் செயலாக இருக்க முடியாது.

போர்ச்சுகீசியர், எந்த நோக்கத்தோடு இப்படி அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகின்றனரோ — அந்த விடுதலைக் கோரிக்கையை மட்டந்தட்டும் நோக்கத்தை ஈடேற்றிவைக்கும் ஆற்றல் துப்பாக்கிகளுக்கு இருந்ததாக வரலாறு ஒருபோதும் கூறவில்லை; மாறாக, துப்பாக்கிக் குண்டுகள், விடுதலை விரும்பிகளுக்கு, மேலும் மேலும் ஆவேச உணர்வைத் தூண்டக் கூடியனவாகவே இருந்து வந்திருக்கின்றன.

இதையும், பதினெட்டாம் நூற்றாண்டுப் போக்கினை மேற்கொண்டிருக்கும் போர்ச்சுகீசியர் உணர்ந்தாக வேண்டும்.

மேலும், கோவா போன்ற ஒரு சிறிய நிலப் பரப்பிலிருக்கும் ஒரு சுண்டைக்காய் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கப் பிடியை அகற்ற இப்படி ஆயிரக்கணக்கில் தொண்டர்களை அனுப்பி, அவர்களில் பலரை பலி தருவதைத் தவிர வேறு மார்க்கமே இல்லையா என்பதையும் விடுதலை இயக்கத்தை நடத்தும் தலைவர்கள் சிந்தித்தாக வேண்டும்.

ஏனெனில், குறைந்த அளவு சக்தியைக்கொண்டே, சிரமமின்றி சாதிக்கக்கூடிய ஒரு காரியத்திற்காக பெரும் அளவில் சக்தியைத் திரட்டி பாழ்படுத்துவது, விவேகமுடைய செயலாக இருக்காது.

போர்ச்சுகீசியர், இரத்த வெறி பிடித்தவர்களாகக் காட்சிதரும் இந்த நேரத்தில், அகிலமெங்கும் செல்வாக்குப் பெற்றிருப்பதாக விளம்பரப் படுத்தப்படும் பண்டித நேரு, கோவா விடுதலைக்கான வேறு வழிகள் என்ன என்பதைக் காண முயற்சித்தாக வேண்டும்.

“கோவா பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதில், சலாசர் சர்க்காருக்குள்ள கஷ்டம் என்ன என்பதை, தன்னால் தெரிந்துகொள்ள முடியாவிட்டால், தனக்கு செல்வாக்கு இருப்பதாகக் கூறப்படும் வல்லரசுகள்மூலமேனும் தெரிந்துகொள்ள முயல வேண்டும்;

“காலனி ஆதிக்கத்தை ஒழிக்கப் பாடுபடுவோம்—என்று பேசிய பாண்டுங் மாநாட்டு நாடுகளின் கவனத்தை பிரச்சினையை நோக்கித் திருப்பவேண்டும்,”

என்பன போன்று, பரவலாக நாட்டில் தெரிவிக்கப்படும் யோசனைகள் பற்றியும் பண்டித நேரு எண்ணிப்பார்க்க வேண்டும்.

'போர்ச்சுகீசிய அடக்குமுறை ஒழிக! அட்டூழியம் அழிக! ஆதிபத்தியம் ஒழிக!' —என்று, மக்கள் குரல் எழுப்புவது போலவே, சர்க்காரும் குரல் எழுப்பிவிட்டு, இனியும் வாளாவிருக்கக் கூடாது.

'உழைப்பாளர் வேதனையைக் கிளறுவது விவேகமற்றதாகும்'

'ஆவன செய்வதற்கு அரசியலார் முன்வர வேண்டும்!'

சீனத் தொழிலாளர் நிலையைச் சிந்துத்துப் பார்க்க வேண்டுகோள்

ஆலைத் தொழிலாளரிடை என். வி. நடராசன்

15—8—55-ல், சென்னை பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர் சங்கச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் அவர்களது சொற்பொழிவின் ஒரு பகுதி நேற்று வெளிவந்துள்ளது; அவரது சொற்பொழிவின் முழுப் பகுதியும் இங்கு தரப்படுகிறது:—

“தோழர்களே! இன்று, இங்கே பெருந்திரளாக நீங்கள் கூடியிருப்பது, சுதந்திர தினத்தின் விழாவினைச் சுவைப்பதற்கல்ல, இன்று, இதே நேரத்தில், சுதந்திர தின விழாவின் பெருமையைப் பேசிக்கொண்டு இந்நாட்டை ஆளும் வர்க்கத்தினர் கோலாகலச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்—வாண வேடிக்கையிலிருந்து, விநோத விளையாட்டுக்கள்வரை, அக்கனவான்கள் ஆடி மகிழ்வர்; ஆனால், அச்சுதந்திர தினத்தை தேடித்தந்த தோள்வலிமை மிக்க தொழிலாளர்கள், இங்கே, வேதனைக் குரலெழுப்புகின்றனர்!

“சுதந்திரமடைந்து எட்டு ஆண்டுகளாகிவிட்டன; 'எங்கள் பெருமையைப் பாரீர்,' என்று எக்காளமிடும் ஆட்சிபீடத்தினருக்கும், அவர்களைத் தாங்கிப் பிடித்து நின்று பதிகம் பாடுவோருக்கும் ஓரளவாவது மனிதாபிமானமிருப்பின், இன்று நீங்கள் இங்கே வடிக்கும் கண்ணீரைக் கண்டு வெட்கப்படுவர்; வெட்கப்படுவது மட்டுமல்ல—உங்களின் துயர்களை தீர்க்க முற்படவும் செய்வர்; ஆனால், ஆளும் வர்க்கத்திற்கு அத்தகு மனவளம் இருக்கிறதா என்பதே ஐயப்பாட்டிற்குரியதாகவன்றோ யிருக்கிறது?

“சீன நாடு சுதந்திரமடைந்து ஐந்தாறு ஆண்டுகள்தானாகின்றன; அச்சுதந்திர ஆட்சி முறையானது, 'உழைப்பவர்களுக்கு உயர்வு — உலுத்தர்களுக்குத் தாழ்வு,' என்ற மகத்தான அடிப்படையில் நடைபெற்று வருகிறது. சீனம் சுதந்திரமடைந்தபின், அங்குள்ள தொழிற்சாலைகளில் பணி புரியும் தோழர்களில், யார் தங்களின் உழைப்பை அதிகமாகவும், அதே சமயத்தில் திறமையாகவும் முடித்துக் காண்பிக்கின்றனரோ அத்தொழிலாளர்களுக்குத் தனி உயர்வும், சம்பள விகிதமும், அத்துடன் அரசியலார்—தொழிற்சாலை நிர்வாகிகள் ஆகியவர்களின் பாராட்டுரைகளும் வழங்கப்படுகின்றன; அந்நாட்டுச் சுதந்திரம் அவ்வாறு உள்ளது.

“நமக்குக் கிடைத்த சுதந்திரத்தில், தொழிலாளர்களை எவ்வளவு நசுக்க முடியுமோ அவ்வளவுக்கும், அவர்களுக்குள்ளாகவே போட்டி மனப்பான்மையை உண்டாக்கி எவ்வளவு அதிக உழைப்பை வாங்க முடியுமோ அவைகளையும் பெற்று, இதற்காக அந்த நேரத்தில் மட்டும் ஏதோ ஒரு சில காசுகளை இனமாக அளித்துவிட்டு, பிறகு—'உனக்கும் பெப்பே! உங்கள் அப்பனுக்கும் பெப்பே!' என்ற கதையைப் போல—அதிகமாக உழைத்துக் காண்பித்த தொழிலாளர்களை முன்னைய கூலிக்கே அதே வேலையைச் செய்யுமாறு வற்புறுத்துகின்றனர் என்றும் தெரிகிறது. குறிப்பாக, பக்கிங்காம்-கர்னாடிக் மில் நிர்வாகிகள் இந்தத் தந்திரத்தில் கைதேர்ந்திருப்பதாக அறிகிறேன்.

“தொழிற் சங்கச் சட்டமோ, அல்லது அரசியல் சட்டங்களோகூட இந்த நயவஞ்சகத்தை ஆதரிக்குமா, இல்லையா என்பது ஒருபுறமிருப்பினும், சாதாரண அளவு மனிதாபிமானம் உள்ளவர்களுமே இத்தகைய பிற்போக்கான நடவடிக்கைகளில்—அதுவும், இன்றைய நிலையில், தங்களின் மேதாவித்தனத்தைக் காட்ட முற்படமாட்டார்கள்; ஆனாலும், சென்னை மில் முதலாளிகள் இந்த வித்தையில் கைதேர்ந்திருக்கிறார்களாம்! அதற்குக் காரணம், 'நாட்டை ஆளும் கனவான்கள் தங்களுக்கு ஆக்கம் அளிப்பார்கள்,' என்ற துணிவைத் தவிர வேறென்னவாயிருக்க முடியும்?

“உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் மிகவும் நியாயமானதேயாகும். இங்கு கொடுத்துவரும் பஞ்சப்படியை 3 அணாவிலிருந்து 4 அணாவாக, அல்லது $3\frac{1}{2}$ அணாவாக உயர்த்துவதினால், மில் நிர்வாகிகளுக்கு நஷ்டமேற்பட்டுவிடும் என்று கூற முடியாது.

“அடிப்படைச் சம்பளம் 28 ரூபாயிலிருந்து 32 ஆக, அல்லது 30 ரூபாயாக உயர்த்தப்படுமானால் பி. அண்டு சி. மில் முதலாளிகளையோ, அல்லது ஆலையின் பொருளாதாரத்தையோ எந்த வகையிலும் பாதிக்காது.

“உபகாரச் சம்பளம் கேட்பதும் பொருத்தமேயாகும்—இது உங்களுக்குத் தரப்படுவதல்ல; உங்களின் மனைவி, குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுவதாகும். பி. அண்டு சி. மில்லில் உள்ள அதிகாரவர்க்கத்திற்கும், அதன் பரிவாரங்களுக்கும் ஏறத்தாழ ஆயிரம் பேருக்குத் தரப்படும் கொழுத்த சம்பளத்தையும், மீதமுள்ள 13 ஆயிரம் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, ஏறத்தாழ, அந்த ஆயிரம் பேருக்கு அளிக்கப்படும் கொழுத்த சம்பளமும்—13 ஆயிரம் உழைப்பாளர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியமும் சமப் பங்காகவே இருக்குமென்று எண்ணுகிறேன்.

“எனவே தொழிலாளர் தோழர்களாகிய நீங்கள், தொழிற் சங்க மூலமாய் கேட்டுவரும் கோரிக்கைகள் மிகவும் நியாயமானது; அது மட்டுமல்ல — இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதால், மில் முதலாளிகள் குவித்துவரும் பெரும் இலாபத்தில் பள்ளமும் விழாது.

“சென்ற ஆண்டுக்கு முன் ஆண்டின் கணக்குப்படி—அந்த ஒரு ஆண்டில், ஒரு கோடியே இருபத்தைந்து இலட்ச ரூபாய் இலாபம், என்று தெரியவருகிறது; இவ்வளவு பெரும் இலாபத்தைக் குவிக்கும் பி. அண்டு சி. ஆலைநிர்வாகிகள், தொழிலாளர்கள் கேட்கும் மிகச் சாதாரண வேண்டுகோளைப் புறக்கணிப்பது நேர்மையற்ற செயல் என்பது மட்டுமல்ல—'இம் முதலாளிகள், தங்களுக்குத் தாங்களே கேட்டினை விளைவித்துக் கொண்டார்கள்,' என்று எதிர்காலம் கூறும் என்பதை அவர்களின் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

“இக்கோரிக்கைகளைப் பெறுவதற்காக சென்னை தொழிலாளர் சங்கம் கையாண்டுவந்த ஆரம்ப முயற்சிகள் வெற்றி பெறவில்லையென்று தெரிகிறது; முதலாளிகளுடன் நடத்திய சமரசப் பேச்சுவார்த்தைகளும் பயனளிக்காமற் போனது வருந்தத்தக்கதாகும்; இதற்காகக் கடந்த நான்கு நாட்களாக குறிப்பிட்ட சில 'டிபார்டு மெண்டு'களில், தொழிலாளர்கள், அமைதியான முறையில் தங்களின் எதிர்ப்பைக் காட்டி வருவதாக எனக்கு முன் பேசிய தொழிற் சங்கச் செயலாளர் கூறினர்.

“இனி அடுத்த முயற்சி—அரசியலாரை அணுகுவதுதான்; எனவே, ஆளும் வர்க்கமாகிலும், முதலாளிகளுக்கு ஆவன கூறி, தொழிலாளர்களின் கோரிக்கைகளை இனிது நிறைவேற்ற வேண்டும் என்பதே திராவிட முன்னேற்றக் கழகச் சார்பிலே இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் என்னுடைய வேண்டுகோள் என்பதையும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இம்முயற்சியும்—வேண்டுகோளும் புறக்கணிக்கப்பட்டு, பின்னர், வேறு வழியின்றி, போராட்டம் மூலம்தான் உங்கள் கோரிக்கைகளைப் பெற வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை மில் நிர்வாகிகளும்—அரசியலாரும் உண்டாக்குவார்களேயானால், அநுசமயம் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னாலியன்ற முழு ஆதரவையும் உங்களுக்குத் தருமென்பதை கழகச் சார்பிலே தொழிலாளர்களாகிய உங்களுக்கும், தொழிற்சாலை நிர்வாகிகளுக்கும், சென்னை அரசியலாருக்கும்-குறிப்பாக முதலமைச்சர் காமராசர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். (திடலில் திரண்டிருந்த பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இதைக் கேட்டு கைகளைத்தட்டி வரவேற்றது குறிப்பிடத் தக்கதாகும்)

“திராவிடர் இயக்கம் தொழிலாளர்களின் போராட்டங்களில் துணையாய் நிற்பது இதுதான் முதன் முறையல்ல; இதனை நீங்களும் அறிவீர்கள்; இதே பி. அண்டு சி. மில் தொழிலாளர்கள் இதற்கு முன் நடத்திய போராட்டத்தில், தொழிலாளர் தலைவர்—தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களுடன், பெரியார் ஈ. வெ. ராமசாமி, அண்ணா ஆகியோர் துணை நின்று பணிபுரிந்ததை சென்னை தொழிற் சங்கத் தலைவர் — இன்று இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துள்ள தோழர் அந்தோனிபிள்ளை அவர்களும் அறிவார்.

தமிழகத்தில் இன்னும் இது போன்ற பல தொழிலாளர் போராட்டங்களில், எங்கள் இயக்கம் துணையாய் நின்று பணிபுரிந்துள்ளதை தொழிலாளர் உலகம் அறிந்ததேயாகும்—இத்தனைக்கும் அத்தொழிலாளர்களிடம் பிரதி பிரயோசனத்தை எதிர்பார்த்தல்ல!

“திராவிட முன்னேற்றக் கழகம்—ஏழை, நடுத்தர மக்களின் நல்வாழ்வுக்காகப் பணியாற்றிவரும் இயக்கமாகும்; எனவே, தொழிலாளர்களின் நேர்மையான நடவடிக்கைகளில் தி. மு கழகம் ஈடுபட்டுவருகிறது.

“பிரிட்டிஷார் இந்நாட்டை ஆண்டபோதும், தொழிலாளர்கள், இவ்வித போராட்டங்களை நடத்தித்தான் உரிமை பெற வேண்டியிருந்தது. இப்போக்கினை அன்று கண்டித்துப் பேசிய தேசியத் திருமேனிகள் இன்று நாட்டை ஆளும் போதும், தொழிலாளர்கள் அதே அவல நிலைக்கு ஆளாக வேண்டியவர்களாயிருக்கிறார்கள்; எனவே, இன்றைய முதலாளித்துவ ஆட்சியில் தொழிலாளர்களின் வாழ்வு வளம் பெறும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

“எனினும் உங்கள் கோரிக்கை சென்னை அரசியலாரின் கவனத்திற்குக் கொண்டு போனதும், அவைகளை இனிது நிறைவேற்ற

(4-ம் பக்கம் பார்க்க.)

உலகுக்கு சமாதான உபதேசமாம்!

தன் வரையில் இட்லர் போன்று மிரட்டுகிறாராம்!

கோவா போராட்டம் நேருவின் தூண்டுதலாம்!

லண்டன் 'சண்டே டைம்ஸ்' இதழின் விந்தையான குற்றச்சாட்டு

லண்டன், ஆக. 14—

"33 ஆண்டுகளுக்கு முன்பாக காந்தியார் நடத்திக் கொண்டிருந்த ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப் பெற்ருர்; ஏனெனில், அந்த இயக்கம் உருவாக்கிய நெருக்கடி, மிகக் கொடூரமான நிகழ்ச்சி ஒன்றுக்குக் காரணமாயிருந்ததுதான்;

"காந்தியாரின் சீடரான நேரு, அந்த 'சௌரி சௌரா' நிகழ்ச்சியையும், காந்தியாரின் உதாரணத்தையும் இப்போது நினைத்துப் பார்ப்பது பொருத்தமாயிருக்கும்;

"இந்தியாவை அடுத்துள்ள கோவாவிற்கு எதிராக இந்தியர்கள் துவங்கியுள்ள பலாத்காரமற்ற இயக்கத்தினை, பண்டித நேரு துவக்கி நடத்துபவராக இல்லாவிடினும், அந்த இயக்கத்தினை அவர் நேரடியாக ஊக்குவிப்பவராகவும், தூண்டி விடுபவராகவும் இருக்கிருர்;

"இதனுல், ஏற்கனவே பல சாவுகளும், கொடுமையான துன்பங்களும் நடைபெற்றிருக்கின்றன; 'சௌரி சௌரா'வைக் காட்டிலும் மோசமான அழிவுகள் இன்று கோவாவில் எதிர்நோக்கியிருக்கின்றன.

"ஆகஸ்டு 15-ம் நாளன்று, ஆயிரக் கணக்கில் கோவாவிற்குள் நுழைவதென, இந்திய ஆர்ப்பாட்டக்காரர்கள் முடிவெடுத்திருக்கின்றனர்; அன்று ஒரு இரத்தக் களறி ஏற்படாமல் போனுல், அது ஆச்சரியமானதாக இருக்கக்கூடும்;

"அப்படி இரத்தக் களறி ஏற்படுமானுல், சர்க்காரின் தலைவராயிருக்கிற ஒரே மனிதர்தான் அதற்குப் பொறுப்பாளியாக வேண்டும்;

"அவரால், இப்போது நினைத்தால்கூட அந்த இரத்தக் களறி ஏற்படாமல் செய்ய முடியும்;

"ஏனெனில், இந்த நிர்ப்பந்தமான சதியாலோசனை, அவருடைய சம்மதத்தின் பேரிலும், ஆதரவுடனும்தான் நடைபெறுகிறது;

"தன் நாட்டிற்கு அருகிலுள்ள பூமியின்மீது கொண்ட பேராசைக்காக, இட்லர் பாணியில் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஒருவரால், எப்படித்தான் அயல் நாடுகளில் உள்ளவர்களுக்கு சமாதானம் குறித்து ஆடம்பரமாக உபதேசம் செய்ய முடிகிறதோ தெரியவில்லை?

"காரண காரியங்களைப்பற்றியதைக் காட்டிலும், மனச்சாட்சியைப் பொறுத்த ஒன்ருக இந்தப் பிரச்சினை இருக்கக் கூடும்; ஆனுல், தவருன செய்கை எது?—பலாத்காரம் எது?—என்பதைத் தெரிந்துகொள்வதில், காந்தியார் செய்த மிகப் பெரிய தவறையே செய்வதாகவே, தரப்படுகிற விளக்கங்கள் கூறுகின்றன;

"பலாத்காரமற்ற முறையில் செய்யப்படுகிற குற்றம், பலாத்காரத்தைப் போன்றே தீயதாக இருக்க முடியும்; கொள்ளையடிப்பவர்களும், சீட்டாட்டத்தில் மோசஞ் செய்பவர்களும் சந்தேகமில்லாமல் குற்றவாளிகள்தான்;

"அறியாதவர்களை தவறிழைக்கத் தூண்டுபவர்கள், 'குற்றம் புரியவில்லை,' என்று கூறி, நீதியின்முன் தப்பித்துக்கொள்ள முடியாது;

"பிறிதொருவரின் விஷயத்தில் அதிகப்பிரசங்கித்தனமாகத் தலையிடுகிற தவறு, சமாதானத்திற்கு—அமைதிக்கு உலை வைக்கிற நிலைக்கு இழுத்துச் செல்லக்கூடும்,"

—என்று, லண்டனிலிருந்து வெளிவரும், கன்சர்வேடிவ் இதழான 'சண்டே டைம்ஸ்' என்ற இதழ், 'மற்றொரு சௌரி சௌரா' என்ற தலைப்பிட்டு எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது

கல்லூரிகளில் கன்னட மொழி போதனு மொழியாகிறது

மைசூர் சர்க்காரின் துணிகர நடவடிக்கை

மைசூர், ஆக. 14—

அடுத்த கல்வி ஆண்டிலிருந்து, கன்னட மொழியை, மைசூர் கல்லூரிகளிலுள்ள முதல் வகுப்புகளிலிருந்து (ஜூனியர் இண்டர் மீடியட் வகுப்பு) போதனு மொழியாக்குவதென மைசூர் பல்கலைக் கழகக் குழு தீர்மானித்துள்ளதாம்

கன்னட மொழியை தாய்மொழியாகக் கொண்டிராத மற்ற மாணவர்கள் மட்டிலுமே, பாடங்களை ஆங்கில மொழியில் பயில அனுமதிக்கப்படுவராம்.

போதனு மொழியாகக் கன்னட மொழியை ஆக்கச் செய்வதற்குத் தேவையான திட்டங்களை வகுப்பதற்கென ஒரு குழுவும் நியமிக்கப் பட்டிருக்கிறதாம்.

அணு உலையால் அபாயங்கள்?

விபத்தைக் கட்டுப்படுத்த விஞ்ஞானி கூறும் வழி

ஜினீவா, ஆக. 15—

"வாயு அழுத்தமுள்ள அணு சக்தி உலை இயந்திரத்தை சரியான இடத்தில் நிறுவ வேண்டும்; அது வெடிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன,"

என்று, நார்வேயைச் சேர்ந்த விஞ்ஞானி ஒருவர், அணு சக்தியை ஆக்க வேலைக்கு உபயோகிப்பது குறித்து ஜினீவாவில் நடைபெறும் சர்வதேச அணு சக்தி மாநாட்டில் கூறியிருக்கிருர்.

மேலும் அவர் இந்த அணு சக்தி உலை இயந்திரத்தை மலைச் சரிவில் நிறுவினுல் வெடி விபத்தைக் கட்டுப்படுத்தலாம் என்றும் தெரிவித்திருக்கிருராம்.

'உற்பத்திக்கு வரம்பு கூடாது'

வர்த்தக சங்கத் தலைவர் எச்சரிக்கை

ஆமதாபாத், ஆக. 15—

"ஆலைகளின் துணி உற்பத்திக்கு ஒரு குறிப்பிட்ட வரம்பு கட்டப்படுமானுல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆலைத் துணிகள் விலையும் ஏறிவிடும்,"

என்று, இந்திய வர்த்தக சபைகளின் சம்மேளன தலைவரான மங்கலதாஸ் கூறியிருக்கிருர்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ஆலைத் துணியின் உற்பத்தியை 500 கோடி கெஜமாகக் கட்டுப்படுத்தி, கைத்தறி, விசைத்தறித் துணிகளின் அளவை 300 கெஜம் வரையிலுமாக அனுமதிக்க இந்திய சர்க்கார் உத்தேசித்துள்ளனர்,"

என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

இதனிடையே இந்திய வர்த்தக சபைகளின் சம்மேளனமும் ஒரு ஐந்தாண்டுத் திட்டம் தயாரித்துள்ளதென்றும், குடியிருப்பு வசதிக் குறைவைத் தவிர்க்க $2\frac{1}{2}$ லட்சம் வீடுகள் கட்டவும், 110 லட்சம் பேருக்குப் புதிதாக வேலை தரவும், ஆளொன்றுக்கு 15 கெஜமாக இருந்துவரும் துணி உபயோகத்தின் அளவை 22 கெஜமாக உயர்த்தவும் அத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிருர்.

மேலும் அவர் பேசுகையில், சர்க்காரின் திட்டமும், சம்மேளனம் தயாரித்துள்ள மேற்படி திட்டமும் ஒன்ருகவே இருந்தாலும் கூட, அவற்றிடையே நடைமுறையில் வேற்றுமை இருப்பதாகவும், எவ்வாறெனில், குடிசைத் தொழிலையும், சிறு தொழில்களையும் சர்க்கார் நம்பிக் கொண்டிருக்கிறது என்றும், ஆனுல், கனரகத் தொழிற்சாலைகளையே விரிவுபடுத்தவேண்டுமென்பதுதான் சம்மேளனத்தின் திட்டம் என்றும் கூறியிருக்கிருர்.

சம்மேளனம் தயாரித்துள்ள மேற்படி ஐந்தாண்டுத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 7,200 கோடி என்றும், தொழிற்சாலைகளுக்கு அதிகமான அளவில் முதலீடு வைக்க வேண்டுமென்பதற்காகவே அவைகள் திட்டமிடப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

பர்மா இந்தியர்

தாய் நாட்டிற்குப் பணம் அனுப்புவதில் ஒரு தடை?

பர்மாவிலுள்ள இந்தியர்கள், இனிமேல், இந்தியாவிலிருக்கும் தங்கள் மனைவியர், உறவினர் ஆகியோருக்கு மாதம் ரூ. 30 தான் அனுப்பலாம் என்று பர்மா சர்க்கார் தபால் இலாகா உத்தரவிட்டுள்ளனர் என்று கூறப்பட்டிருக்கிறது.

இவ்வுத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்னர் வரையிலும், அவர்கள் மாதம் ரூ. 40 வரையிலும் அனுப்ப அனுமதிக்கப்பட்டு வந்தனர்.

மேற்கண்ட இவ்வுத்தரவு உடனடியாக அமுல் செய்யப்படும் என்றும், இதன் விளைவாக பாகிஸ்தான், மலேயா ஆகிய நாடுகள் பாதிக்கப்படக்கூடும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

முதன் முதலாக!

அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர், முதன் முதலாக, மத்திய ஆட்சியின் தொழிலாளர் இலாகா கூட்டுக் காரியதரிசி பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிருராம்; எஸ். நீலகண்டம் என்ற பெயருடைய அவர் ஆந்திராவைச் சேர்ந்தவராம்.

2,40,000 மைலில் உள்ள சந்திரனை எட்டிப் பிடிக்க முடியுமா?

இயற்கையை அடக்கி ஆளும் முயற்சியில் விஞ்ஞானிகள் அடைந்துவரும் வெற்றி

செயற்கை நிலவை வானவெளியில் அனுப்புவதால் ஏற்படும் சாத்தியக்கூறுகள்

★

ஒரு நூற்ருண்டு அளவிற்குள் மனிதன் இயற்கையை எவ்வளவு தூரம் அடக்கி ஆண்டிருக்கின்ருன் என்பதை நினைக்கும்போது உண்மையாகவே வியப்புத் தோன்றும்; கடலுக்குக் கீழ் கப்பலைச் செலுத்தவும், நிலத்தின் மீது கார் ஓட்டவும், வானத்தின் வழியே விமானத்தைப் பறக்கச் செய்யவும் முயன்று வெற்றியடைந்தான்; இன்று, இன்னொரு புதுமை—'இன்று அல்லது நாளை' என்னும் நிலையில் இருக்கிறது; சந்திரனையும், அதற்கும் அப்பால் உள்ள நட்சத்திரங்களையும் மனிதன் சென்று காணக் கூடிய புதிய யுகம் விடியப் போகிறது; பூமியைச் சுற்றிச் 'செயற்கை நிலவு' ஒன்று செய்துவிடப் போவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரனை எட்டிப் பிடிக்க முடியுமா?—பூமியிலிருந்து சந்திரனுக்கு 2,40,000 மைல். பூமிக்கு மேல் சுற்றிவரும் செயற்கை நிலவு, அதிலிருந்து சந்திரனை நோக்கிச் செல்லும் சாதனத்தை உந்தக்கூடிய வசதியமைந்ததாய் இருக்க வேண்டும். 'அத்தகைய செயற்கை நிலவைச் செய்துவிட்டால், இயற்கைச் சந்திரனை எட்டிப் பிடித்துவிடலாம்' என்கின்றனர், ஆராய்ச்சியாளர். எனினும், 'வான வெளிப் பயணத்தால் நம் உடம்பும், மனமும் நொறுங்கிப் போகாமல் பிழைத்திருக்க இயலுமா?'—என்பதைப்பற்றி நாம் இன்று அறிந்திருப்பது போதாது; இன்னும் அறிய வேண்டுவது எவ்வளவோ உண்டு.

சந்திரன் பூமிக்கு அருகில் இருப்பது; இன்னும் அதிகத் தொலைவிலுள்ள கோள்களைப் போய் அடைவது இன்னும் அதிகக் கடினமும், ஆபத்து நிறைந்ததும் ஆகும்; என்ருலும் 'நம்மில் பலருடைய வாழ்நாளிலேயே செவ்வாய் அல்லது வியாழனை மனிதன் எட்டிப்பிடித்து விடுவான்,' என்று விஞ்ஞானிகள்—ஒருவர், இருவர் அல்ல—பலர் கருதுகிருர்கள். கி. பி. 2000-க்கு முன், அது உண்மைச் செய்தியாகிவிடும் என்கின்றனர். விஞ்ஞானக் கட்டுக் கதைகள் மெய்யான நிகழ்ச்சிகளாக மாறுவது நடந்துகொண்டுதான் இருக்கிறது.

மனிதன் செய்யும் செயற்கை நிலவு, விண்ணில் தோன்றும் காலமும் பொருத்தமான காலந்தான். 1957-ன் இடையிலிருந்து 1958 வரை பல நாட்டு விஞ்ஞானிகள் சேர்ந்து, 'சர்வதேச பூகர்ப்ப ஆண்டு' என்பதொன்று கொண்டாட இருக்கிருர்கள். வானிலை, கடல், பூகர்ப்பம், சூரியனிலிருந்து கிடைக்கும் வெப்பம், வெளிச்சம், ஆகாய மண்டலத்தின் மேற்பகுதி முதலிய பல இயற்கைக் கூறுகளைப் பற்றி அறிந்தவற்றை, அந்த ஆண்டில் சுமார் 40 நாட்டு விஞ்ஞானிகள் கலந்து பேசுவர்.

முதன் முதல் செய்யப்படும் செயற்கை நிலவு, ஒரு கால்பந்து அளவுதான் இருக்கும். அதனை ராக்கெட் மூலம் வானில் செலுத்தி விட்டு விடுவார்கள் எனத் தெரிகிறது. அதன்பின் அது பூமிக்கு 250 மைல் உயரத்தில் ஏறக்குறைய மணிக்கு 18,000 மைல் வேகத்தில் பூமியைச் சுற்றிச் சுற்றி வரும். சில நாட்கள் இவ்வாறு சுற்றிய பின், அதன் வேகம் குறைந்து, அதுவும் குலைந்து கீழே விழுந்துவிடும்.

'இதனுல் என்ன பயன்? இதனுல் இன்னின்ன நன்மைகள் உண்டு?'—என, இன்று விவரமாக அறுதியிட்டுச் சொல்ல முடியாது என்பது விஞ்ஞானிகளுக்குத் தெரியும். ஆயினும், ஆளில்லாமல் இயங்கும் இந்தச் செயற்கைக் கோளில் வைத்து அனுப்பிய கருவிகள், உடனுக்குடன் பூமியிலுள்ளவர்களுக்குத் தெரியப்படுத்தும் விஞ்ஞானத் தகவல்கள், இவ்வுலகத்தைப் பற்றி நாம் இன்றுவரை அறியாத பல உண்மைகளை விளக்கும்.

உதாரணமாக, காஸ்மிக் கதிர்கள், சூரியனின் பிரகாசம் இவை பற்றிய தகவல்கள் தெரியவரும். வானத்தின் வழியே சூரிய மண்டலத்திலுள்ள பல்வேறு கோளங்களுக்கும் செல்வதற்குத் தக்க வானவெளிக் கப்பல் கட்டவும், அதில் கருவிகள் மட்டும் அன்றி மக்களும் செல்வதற்கு ஏற்பாடு செய்யவும் இத்தகவல்கள் பேருதவியாயிருக்கும்.

செயற்கை நிலா செய்யக்கூடிய உடனடியான நன்மைகள் இன்னும் பல; சூரியனிடமிருந்து கிடைக்கும் சக்தியைப் பற்றி அது தெரிவிக்கும் தகவல், பூமியின் நீண்ட காலத் தட்ப வெப்ப நிலை பற்றி எவ்வளவோ அறிவதற்குத் துணை செய்யும் பணி. ஆறுகள் பரவுமா, குறையுமா?—வறண்ட காடுகளில் ஈரப் பசை பெருகுமா, அருகுமா?—இத்தகைய தகவல்கள், உலகமெங்கும் உழவு, வியாபாரம், மக்கள் குடியேற்றம் ஆகியவற்றைப் பாதிப்பவை; 'செயற்கை நிலவு' ஆராய்ச்சியால் இவற்றை அறியலாம்.

சுற்றிவரும் செயற்கை நிலாவைப் பூமியின் சில பகுதிகளிலுள்ளவர்கள், வானிலை சரியாக இருந்தால், ஒன்றரை மணி நேரத்துக்கு ஒரு முறை நேரே கண்ணுல் காணலாம்; இதற்குக் காரணம், இயற்கை நிலவைப்போல் அதுவும் சூரிய ஒளியைப் பெற்றுத் திருப்பி வீசுவதேயாகும்.

விஞ்ஞானிகள் 'டெலஸ்கோப்பு'களாலும் மின் அணுக் கருவிகளாலும் செயற்கை நிலா மீது பார்வை செலுத்துவார்கள்.

பூமியைச் சுற்றியுள்ள வாயு மண்டலத்துக்கும் வெளியே உள்ளவற்றைப் பற்றி இச்செயற்கை நிலா வாயிலாக அறிய அறிய, பெரிய பெரிய செயற்கை நிலாக்களைச் செய்யும் வகையுண்டாகும். பூமிக்கு 1,000 மைல் உயரத்துக்கு மேலே எப்போதும் சுற்றிக் கொண்டுவரும் செயற்கை நிலா ஒன்றை இன்னும் 25 ஆண்டுகளில் செய்தாலும் செய்துவிடலாம்.

இவ்வாறு விண்ணிலிருந்து விழாதபடி எப்போதும் இருக்கக் கூடிய செயற்கை நிலவுகளை விண்ணில் தொங்கவிட்டுவிட்டால், அவை வானொலிக் கதிர்களையும், டெலிவிஷன் கதிர்களையும் உலகில் நெடுந் தொலைவு அனுப்புவதற்கு ஏற்ற அஞ்சல் நிலையங்களாக விளங்கும். அவற்ருல் சூரிய சக்தியை அதிகமாகப் பயன்படுத்தும் வழியும் கிடைக்கலாம் என்கிருர்கள் விஞ்ஞானிகள். வெய்யிலில் உள்ள சக்தியை, தக்க கருவிகளால் அந்தச் செயற்கை நிலவுகளில் சேமித்துவைத்து, வேண்டும்போது பூமிக்கு அனுப்பக்கூடும்.

மாணவர் 'டிக்கெட்டில்லா பிரயாணம்!'

சுதந்திர தினத்தை ஒட்டி அமளி

ஆந்திராவில் நிகழ்ச்சிகள்

விஜயவாடா, ஆக. 16—

மசூலிப்பட்டினம்—விஜயவாடா ஆகிய இரயில் நிலையங்களுக்கிடையே, இரயில் போக்குவரத்து இன்று சுமார் 12 மணி நேரமாகத் தடைப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. மாணவர்களின் நடத்தையே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டிருக்கிறது.

விஜயவாடாவில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் கலந்து கொள்வதற்காக, குடிவாடா எனும் இடத்திலிருந்து இரயிலில் டிக்கெட்டில்லாமல் பிரயாணம் செய்த சுமார் 500 மாணவர்கள் மீண்டும் குடிவாடாவிற்கு திரும்பிச் செல்ல டிக்கெட் இல்லாமலேயே போக வேண்டுமென விரும்பியதின் பேரிலேயே இரயில் போக்குவரத்தைத் தடை செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

குடிவாடாவில் அம்மாணவர்கள் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்வதைத் தடுத்து நிறுத்த முயன்ற அதிகாரிகள் மீது சிறு கற்களை வீசி தாக்கினார், மற்றும் சில போலீஸ் கான்ஸ்டபிள்கள் ஆகியோருக்குக் காயம் விளைவித்ததாகவும், இரயில் நிலையத்தின் வெளிப்புற அறிவிப்புக் கம்பத்திற்குச் சென்று கம்பியை அறுத்து விட்டதாகவும், எனவே இரயில் மேலும் போகாமல் அப்படியே நிலைநின்றதாகவும் தெரிகிறது.

விஜயவாடாவிலிருந்து மறுபடியும் குடிவாடாவிற்கு டிக்கெட் இல்லாமலேயே பிரயாணம் செய்ய முயற்சித்த அம்மாணவர்களை மறுபடியும் இரயில்வே போலீசார் தடுத்திருக்கின்றனர்.

தாங்கள் திரும்பிச் செல்லும் போதும் டிக்கெட் இன்றியே பிரயாணம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் சத்தியநாராயணபுரம் இரயில் நிலையத்திற்கு காலையில் வரும் கர்நூல் எக்ஸ்பிரஸ் வண்டியை நிறுத்தச் செய்ததாகச் சுமார் 1000 பேர்கள், தண்டவாளங்களின் மேல் உட்கார்ந்துகொண்டனராம்.

இதனிடையே, கிருஷ்ணா மாவட்ட கலெக்டர், மாவட்டப் போலீஸ் அதிகாரி, இரயில்வே துணை போலீஸ் அதிகாரி, சப்-கலெக்டர் மற்றும் பல அதிகாரிகளும் மேற்படி நிலையத்திற்கு விரைந்து வந்து, மாணவர்களை, இரயில் பாதையைவிட்டு அப்புறப்படுத்த முயற்சித்திருக்கின்றனர்; அவர்களது முயற்சியும் தோல்வியுற்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. தங்களுடன் ஆயுதந்தரித்த போலீஸ் குழு ஒன்றையும் அவ்வதிகாரிகள் அழைத்து வந்ததாகத் தெரிகிறது.

பின்னர் கலெக்டர் மாணவர்களை நெருங்கி அவர்களை வேண்டிக் கொள்ளவும், மாணவர்கள் தங்களிடம் பணம் எதுவும் இல்லாததாலேயே டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்ய இருப்பதாகக் கூறியிருக்கின்றனர்; உடனே கலெக்டர், அங்கிருந்து 12 கல் தொலைதூரத்திலுள்ள காங்கிப்பாடு எனும் இடம் வரைக்கும் அவர்களை போலீஸ் லாரிகளில் அழைத்துச் சென்று அவர்களுக்கு வசதி செய்து தருவதாகவும், பின்னர் அங்கிருந்து தங்கள் இடத்திற்கு நடந்து செல்ல விடும்படியும் கேட்டுக்கொண்டாராம்; அத்துடன், அவர்களுக்குத் தேவையான பல் உணவிற்கும் வசதிகள் செய்து தருவதாகவும் வாக்களித்திருக்கிறார்.

முதலில் மாணவர்கள் இதனை ஏற்றுக்கொள்ளவிட்டாலும், பின்னர் சுமார் 120 மாணவர்கள், கலெக்டரின் வேண்டுகோளுக்கு இணக்கம் தெரிவித்ததின் பேரில் உடனடியாக அவர்கள் பிரயாணத்திற்கும், உணவிற்கும் தேவையான வசதிகள் செய்து கொடுக்குமாறு கலெக்டர் உத்தரவிட்டிருக்கிறார்.

அந்த 120 மாணவர்களும் சென்ற பின்னர், மற்ற மாணவர்கள், புதிவாடா நோக்கிச் செல்லும் இரயில் பாதை வழியே நடந்து செல்ல ஆரம்பித்திருக்கின்றனர். அவ்வாறு நடந்து சென்ற அவர்கள், பாதை நெடுக தடைகற்களை வைத்துச் சென்றனராம். விசேட இரயில் ஒன்றில் ஏறிச் சென்ற கலெக்டர், சப்-கலெக்டர், போலீஸ் அதிகாரிகள், மற்றும் ஆயுதந்தரித்த போலீசார் ஆகியோர் அவர்களைத் துரத்திவிட்டு, பாதைகளில் வைக்கப்பட்டிருந்த தடைக்கற்களையும் அகற்றிவிட்டுச் சென்றனராம்.

அந்த மாணவர்களில் 12 பேரை போலீசார் கைது செய்தனரென்னர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

விஜயவாடா—நிடாமாறு ஆகிய இரயில் நிலையங்களுக்கிடையே போலீஸ் பாதுகாவல் வைக்கப்பட்டிருப்பதாகவும், பலத்த ஆயுதப் படைகளின் உதவியுடன் இரயில் போக்குவரத்துக்கள் மீண்டும் நடைபெற்றன என்றும் கூறப்பட்டிருக்கிறது.

உழைப்பாளர் ...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அரசியலார் உடனடியாக முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்; அவ்விதமே எதிர்பார்க்கிறேன். கூமொனவரை போராட்டமின்றியே உங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் விரும்புகிறது.

"ஆனால் ஆட்சியாளரும், ஆலை முதலாளிகளும் மனவளம் பெறுமல், தங்களின் பிடிவாதத்தின் பெருமையை நிலைநாட்ட முற்பட்டு, வேறு வழியின்றி நீங்கள் போராட்டம் துவக்க நேரிட்டால் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னாலியன்ற உதவியைச் செய்யுமென்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இந்தியாவிலுள்ள தொழிற் சங்கங்களுக்கெல்லாம் தாய்ச் சங்கமாக விளங்குவதும், தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களால் தோற்றுவிக்கப்பட்டதுமான இத்தொழிற் சங்கத்தின் மிகச் சாதாரண கோரிக்கைகளை நிறைவேற்றுவதில், ஆலை முதலாளிகள் மேலும் வீண் பிடிவாதத்தை வளர்த்துக் கொண்டு, உழைப்பாளர்களின் வேதனையைக் கிளறும் அநீதியில் காலத்தையும், கருத்தையும் வீணாக்காமல் சற்று விவேகமுடன் விட்டுக் கொடுத்து, தொழிலாளர்களின் ஒத்துழைப்பைப் பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்."

★

நிகழ்ச்சிகள்

15-8-55 மாலை, சென்னை-பெரம்பூர் பாரக்ஸ், கான்ரான் ஸ்மித் நகர் மைதானத்தில், சென்னை பக்கிங்காம் கர்நாடிக் ஆலைத் தொழிலாளர்கள் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு சென்னை தொழிற் சங்கத் தலைவர் திரு. எஸ்.ஆர். அந்தோணி பிள்ளை தலைமை தாங்கினர். துவக்கத்தில் தொழிற் சங்கப் பொதுச்செயலாளர் தோழர் எ. பக்கிரிசாமி, தொழிலாளர் தோழர் நாராயணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என்.

நெல்லை மாவட்டத்தில் அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

★

18 மாலை 6 மணி: கீளப்பாவூர்; இரவு 8½ மணி: முக்கூடல்.

19 மாலை 6 மணி: விக்கிரமசிங்கபுரம்; இரவு 8½ மணி: வீரவநல்லூர்.

20 காலை 10 மணி: அம்மன்புரம்; மாலை 6 மணி: ஆத்தூர்; இரவு 8½ மணி: சிவத்தயாபுரம்.

21 காலை 10 மணி: பாளையங்கோட்டை; மாலை 6 மணி: தூத்துக்குடி.

ஒத்திவைப்பு

17—8—55ல், சென்னை-சேப்பாக்கம் பார்த்தசாரதி நாயுடு தெருவில் நடைபெற விருந்த தி. மு. கழக 40-வது வட்ட பொதுக் கூட்டம், போலீஸ் அனுமதி கிடைக்காததால் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது" என்று செயலாளர் தோழர் சௌந்தரீசன் அறிவிக்கிறார்.

சொற் பயிற்சி மன்றம்

18—8—55 இரவு 10 மணிக்கு, மதுரை, ஆட்டு மந்தை பொட்டல் சந்தில் மீன் மார்க்கட் சமீபம் உள்ள அறிவு வளர்ச்சி படிப்பகத்தின் சொற் பயிற்சிக் கூட்டம், தோழர் எ. எஸ். கணேசன் தலைமையில் நடைபெறும். 'புரட்சி' என்னும் பொருள் பற்றி தோழர்கள் எஸ். பி. எஸ் ஹமீது, எம் காசிம், மு. காதர் ஆகியோர் பேசுவர்.

பொன்மலை—
மேலக்கற்கண்டார்கோட்டை
தி.மு. கழக உறுப்பினர்கட்கு

18—8—55 மாலை 7 மணிக்கு, பொன்மலை — மேலக்கற்கண்டார் கோட்டை தி. மு. கழக உறுப்பினர் கூட்டம், கழகக் கட்டிடத்தில், தோழர் அம்பில் தருமலிங்கம் முன்னிலையில் நடைபெறும்.

தேவைக்கு மேல் கிடைத்து விட்டதாம்!

சென்னை, ஆக. 16—

சென்னை சர்க்காரின் ரூ. 7 கோடி கடன் வெளியீட்டிற்கு, தேவைக்கும் அதிகமாக ஒரே நாளிலேயே கிடைத்துவிட்டதாம்!

இந்தக் கடன் முதல் நாளன்று இரண்டே மணி நேரத்திற்குள் பூர்த்தியாகிவிட்டது என்றும், சென்னை நகரம் மட்டும் ரூ. 7·13 கோடி தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அன்றைய தினத்தில் மாலையில் மொத்த வசூல் ரூ. 14 கோடி வரையிலும் (சுமார்) இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், சர்க்காரின் தேவைக்கும் அதிகமாகக் கடன் வசூலாகிவிட்டதால் ஏற்கனவே அறிவித்துள்ளபடி விகிதாசார அளவில் கடன் மனுக்களை ஒப்புக்கொள்ளுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வி. நடராசன் அவர்கள் ஆலைத் தொழிலாளர் நிலை குறித்தும், தொழிலாளரிடையே தி. மு. கழகத்தின் தொடர்பு குறித்தும் அரிய தோர் உரை நிகழ்த்தினர்.

கூட்டத்திற்குப் பல்லாயிரக்கணக்கில் பொதுமக்கள் திரண்டிருந்தனர். கொட்டும் மழையிலும் மக்கள் அனைவரும் மிக ஊக்கமுடன் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தது பாராட்டத்தக்குரியதாகும்.

துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கட்கு பி. அண்டு சி. தொழிலாளர் சங்கச் சார்பில் மேல்துண்டு ஒன்று அணிவிக்கப்பட்டது.

கோவா படுகொலை எதிரொலி:

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

மேலும், நேற்று கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட சுபத்திராபாய் என்ற பெண்மணி இறக்கவில்லை என்றும், குண்டுக் காயங்களுடன் மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"போர்ச்சுகீசியரின் நடத்தை அரசியல் பிரச்சினையல்ல; ஆனால், இந்த நாகரீகம் மிகுந்த யுகத்தில், மனிதர்களை எப்படி நடத்துவது,' என்பதுதான் பிரச்சினையாகும்; அரசியலுடன் தொடர்புடைய பிரச்சினையல்ல அது; ஒரு மனிதரின் கடமைகளையும், உரிமைகளையும் பொறுத்த அடிப்படைப் பிரச்சினையாகும்;

"சரித்திர, கலாச்சார, பூகோள ரீதியாக தன்னுடன் ஒற்றுமை கொண்ட ஒரு மக்கள் கூட்டம் வாழும் பகுதிக்குள், ஒரு மனிதன் ஆயுதமேதுமின்றி, அந்த மக்களின் நேரடியான அல்லது மறைமுகமான கூட்டுறவுடன் நுழைந்தால், அவன், இம்மாதிரி மிருகத்தனமாகத்தான் நடத்தப்பட வேண்டுமா? இது ஒரு முக்கியமான கேள்வி; உலகத்தின் நாகரீகத் தரத்தைக் காப்பாற்ற வேண்டியவர்கள், இந்தக் கேள்வி குறித்து சிந்தித்துப் பார்ப்பார்களென்று நினைக்கிறேன்,"

என்றும் பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

மக்கள் சபையில் பேசிய பிரதமர் நேரு குறிப்பிட்டதாவது:—

"போர்ச்சுகீசியர், நாம் தவறான வழிகளில் செல்ல வேண்டுமென்று விரும்பித்தான் இவ்வாறு நடந்துகொள்கிறார்கள்போலும்! அவர்களது காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகள்கூட நம்மைத் தவறான வழிக்கு இழுத்துச் செல்லமாட்டாது; நாம் தொடர்ந்து, சமாதான வழிகளிலேயே கோவா விடுதலைக்கு முயற்சிப்போம்;

"கதை இத்துடன் முடிந்துவிடவில்லை. வேறு சம்பவங்கள் தினம் தினம் நடைபெற்றுக்கொண்டு வந்தன. இனியும் நடைபெறக்கூடும். இலட்சியம் ஈடேறும்போதுதான் கதை முடியும்;

"போர்ச்சுகீசியர் நேற்று நடந்துகொண்ட முறை—நான் எச்சரிக்கையுடன் வார்த்தைகளை ஆராய்ந்துதான் உபயோகிக்கிறேன்—மிருகத்தனமானது; அநாகரீகத்தின் எல்லையைத் தொடுவது'—என்று கூற விரும்புகிறேன்;

"'சத்தியாக்கிரகம்' என்பது, வேண்டுமென்றே—அமைதியாக ஒரு குற்றம் புரிவதுதான்; ஆனால், கோவா பற்றி மட்டுமல்ல—பொதுவாக, அதில் உலக விவகாரங்களுக்கும் முக்கியமானதாக எழக்கூடிய கேள்வி என்னவெனில், 'எவரையும் தாக்க முற்படாமல், அமைதியாக நடந்துகொள்ளும் நிராயுதபாணிகளான மக்களை, ஒரு சர்க்கார் சுட்டுக் கொல்வது எந்த வகையில் நியாயமுடையது?' என்பதுதான்."

★

பம்பாயில் ஆர்ப்பாட்டம்

போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்

பம்பாய், ஆக. 16—

இன்று பிற்பகல் முழுமையிலும், பம்பாய் கொலாபாவிலுள்ள போர்ச்சுகீசியத் தூதுவராலயத்தின் முன்னர் சுமார் 30,000 ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடிநின்று ஆர்ப்பாட்டம் செய்ததாகவும், எனினும், காரியாலயத்தின் உள்ளே எவரும் நுழையவிடாதபடி பலத்த போலீஸ் பாதுகாவல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்றும் தெரிகிறது.

ஆனால் சர்க்கார் காரியாலயங்கள் மீதும், சர்க்காருக்குச் சொந்தமான புதிய கட்டடங்கள் மீதும் கற்களை வீசிச் சேதமுண்டாக்கிய ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க 4 இடங்களில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

மேற்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் மேற்கொண்ட கல்லெறி நிகழ்ச்சிகளின் விளைவாக, 44 பொது மக்கள் உட்பட 62 பேர் காயம்பட்டனர் என்றும், 6 உள்நாட்டுப் பாதுகாவலர்கள் உட்பட 18 போலீஸ் கான்ஸ்டபிள்களும், மற்றும் 3 போலீஸ் அதிகாரிகளும் காயம்பட்டனர் என்றும் தெரிகிறது.

தடை உத்தரவு

நகரில் 25 முறைகள் கல்லெறிச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாகவும், அதனையொட்டி 36 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் உயர்தரப் போலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

நகரில் உள்ள முக்கிய இடங்களிலெல்லாம் 5 பேர்களுக்கு மேல் கூடக்கூடாதென்று, போலீஸ் கமிஷனர் தடையுத்தரவு பிறப்பித்துள்ளார் என்றும், அத்தடையுத்தரவு, 3 நாட்களுக்கு அமுலில் நடத்தப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மேலும், 5,000-த்திற்கு மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை, சர்க்கார் காரியாலயத்தின்மீது கல்லெறிவதினின்றும் தடுத்து, அவர்களை கலைக்கச் செய்வதற்காகப் போலீசார் திரும்பத் திரும்பப் பலமுறை கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர் என்றும், பின்னர், மேற்படி ஆர்ப்பாட்டக்காரர்களின் தூதுக் குழு ஒன்று, சர்க்கார் துணைச் செயலாளரைச் சந்தித்து, கோவா விடுதலை இயக்கத்தில் பங்கு பெற்று மடிந்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், 11 நாட்களுக்குத் தொடர்ந்து, தேசியக் கொடி தாழ்த்திப் பறக்கவிடப்பட வேண்டுமென்பதே தங்கள் கோரிக்கை என்றும் தெரிவித்தனராம்.

தலைவர் பதவிக்கு தேர்தல்

சென்னை சட்டசபையின் சபைத் தலைவராக உதவி சபைத்தலைவர் பி. பக்தவத்சலு அவர்கள் பதவியேற்றுள்ளார்; சபைத் தலைவர் தேர்தலுக்கான நாளை கவர்னர் தான் தெரிவிக்கவேண்டுமென்று இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

அனேகமாக இத்திங்கள் 23-ந் தேதி இத்தேர்தல் நடைபெறலாம் என்று தெரிகிறது.

நம்பி நம்பித்தானே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா முழுமைக்குமாக ஒதுக்கப்பட இருக்கும் ரூ. 3,400 கோடி தவிர, சென்னை சர்க்கார் மேலும் ரூ 170கோடிமுதல்ரூ.180 கோடி வரையிலும் மத்திய சர்க்காரிடமிருந்து பெறுமானால் அத்தொகையின் அடிப்படையில் சென்னை மாநிலத்திற்கும் 'நியாயமான' பங்கு கிடைத்துவிட்டதாகவும் சொல்லலாம்! இத்தொகையைப் பெறலாம் என்று சென்னை சர்க்காரும் நம்பிக் கொண்டிருக்கிறது!

—சென்னை அதிகாரி ஒருவரின் விளக்கம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, குரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.